**முதன்மை சார்பு நீதிமன்றம், திருநெல்வேலி.**

முன்னிலை: திரு.த.ராஜகுமார், எம்.ஏ., எல்.எல்.எம்.,
முதன்மை சார்பு நீதிபதி, திருநெல்வேலி

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 ம் நாள் புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் மாசி மாதம் 13 ம் நாள்)

**அசல் வழக்கு எண். 319/2025**
(CNR No. TNTL 05 – 000867 2025 )

அந்தோணியம்மாள் ... வாதி

/எதிர்/

1. இருதயபுஷ்பம்
2. ஜெபா
3. கல்லத்தியான் ... பிரதிவாதிகள்

**நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கான பரிகாரம் அல்லது சொத்தின் விபரம்**

| சட்டப் பிரிவும் உட் பிரிவும் | வழக்கின் தன்மை | சொத்தின் வருடாந்திர தீர்வை அல்லது குத்தகை | பிராது பரிகாரத்தின் மதிப்பு அல்லது சொத்தின் கடை விலை | நீதிமன்ற முத்திரைக் கட்டண மதிப்பு |
|---|---|---|---|---|
| Sec 42 | ஏற்றதை ஆற்றுக பரிகாரம் | | ரூ. 3,00,000 | ரூ. 9000/– |
| | மொத்தம் | | | ரூ.9000/– |

// உத்தரவுப்படி //

**முதன்மை சார்பு நீதிமன்றம், திருநெல்வேலி.**
முன்னிலை: திரு.த.ராஜகுமார், எம்.ஏ., எல்.எல்.எம்.,
முதன்மை சார்பு நீதிபதி, திருநெல்வேலி

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 ம் நாள் புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் மாசி மாதம் 13 ம் நாள்)
**அசல் வழக்கு எண். 319/2025**
(CNR No. TNTL 05 – 000867 2025 )

அந்தோணியம்மாள், க/பெ. மாரியப்பன், கிறிஸ்தவர், வயது 57, கதவு எண் 181 சி முத்து கார்டன், சீனிவாசகம் நகர், மகாராஜா நகர் அஞ்சல், பாளையங்கோட்டை தாலுகா, திருநெல்வேலி 627 011. ... வாதி

/எதிர்/

1. இருதயபுஷ்பம், க/பெ. லேட். ஆரோக்கியராஜ், கிறிஸ்தவர், வயது 49, கதவு எண் 181 சி சீனிவாசகம் நகர், மகாராஜா நகர் அஞ்சல், திருநெல்வேலி 627 011.

2. ஜெபா, த/பெ. லேட். ஆரோக்கியதாஸ், கிறிஸ்தவர், வயது 30, கதவு எண் 181 சி சீனிவாசகம் நகர், மகாராஜா நகர் அஞ்சல், திருநெல்வேலி 627 011.

3. கல்லத்தியான், த/பெ.லேட். ஆரோக்கியராஜ், கிறிஸ்தவர், வயது 28, கதவு எண் 181 சி சீனிவாசகம் நகர், மகாராஜா நகர் அஞ்சல், திருநெல்வேலி 627 011. ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது வாதி தரப்பில், பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | : | 25.09.2025 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 06.10.2025 |
| வழக்கு வியாஜ்ஜிய மூலம் | : | 28.07.2025, 07.11.2024, 22.08.2025, 21.09.2025, 13.09.2025, 15.09.2025 ஆகிய தேதியில் நீதிமன்ற எல்கைக்குள்பட்ட பாளையங்கோட்டை வைத்து உற்பத்தி. |
| தாவா பரிகாரத்தின் மதிப்பு | : | இந்த வழக்கின் பரிகாரத்திற்கு ரூ.3,00,000/– ஆக மதித்து தமிழ்நாடு சட்டப்பிரிவு 22 ன் படி ரூ.9000/– நீதிமன்ற முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன் 09.02.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பி.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணையை அனுப்பி சார்வாகியும் அவர்கள் ஆஜராகாததால் அவர்கள் இவ்வழக்கினை பொறுத்த வரையில் ஒரு தரப்பு நிலை உத்தரவிற்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட வாதவுரையை கேட்டறிந்து, வழக்காவணங்களைப் பார்வையிட்டு, இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் வைத்திருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**தீர்ப்பாணை**

1) வாதி வழக்கு அனுமதித்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

2) பிராது பட்டிகை சொத்தை பொறுத்து வாதி கோரியபடி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வாதிக்கு வழங்கி ஆணையிடப்படுகிறது.

3) இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வாதி கிரைய மீத தொகையான ரூ.2,50,000/-த்தை பிரதிவாதிகளுக்கு அளிக்க வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது.

4) பிரதிவாதிகள் அத்தொகையை பெற்றுக்கொள்ள மறுத்தால் இந்த நீதிமன்றத்தில் உரியவாறு வாதி வைப்பீடு செய்ய வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது.

5) பிரதிவாதிகள் மேற்படி தொகையை பெற்றுக் கொண்ட பிறகு வாதிக்கு, இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பிராது பட்டிகை சொத்தை குறித்து கிரைய பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

6) வாதிக்கு, பிரதிவாதிகள் இவ்வழக்கு செலவுத்தொகை ரூ.14,085/- செலுத்த உத்தரவிடப்படுகிறது_

<u>செலவு விபரப்பட்டியல்</u>

| வ.எண் | விபரம் | வாதி | | பிரதிவாதி |
|---|---|---|---|---|
| 1 | பிராதில் வில்லை | 9000 | 00 | தாக்கல் இல்லை |
| 2. | வக்காலத்தில் வில்லை | 10 | 00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வழக்கறிஞர் ஊதியம் முதுநிலை | 5075 | | |
| மொத்தம் | | 14085 | 00 | |

**<u>Schedule of property</u>**

பாளையங்கோட்டை ரி.டி. மேற்படி சப்டி சரகம், பாளையங்கோட்டை தாலுகா, விஜயராகவ முதலியார் சத்திரம் கிராமம், அடங்கல் 43B & 45 ம் நம்பர்களுக்கு அயன் புன்செய் ரீ சர்வே 181/3 ம் நம்பரில் உள்ள நிலத்தை வீடு கட்டும் மனைகளாகப் பிரித்துள்ளதில் அமைந்துள்ள பிளாட் எண். 3 க்கு எல்கை :

வடக்கே : 2 ம் நம்பர் பிளாட்

தெற்கே : 4 ம் நம்பர் பிளாட்

மேற்கே : 40 அடி அகல பொது ரோடு

கிழக்கே : ஓடை

இந்நான்கு எல்கைக்குள்பட்ட கிழமேல் வடதலை 127 அடி தென்தலை 138 அடி தென்வடல் மேல்தலை 60 அடி கீழ்தலை 62 அடி உள்ள மேற்படி பிளாட் மனையும் அதற்குரிய சகல பாத்தியதை உரிமைகள் உள்படவும் இதில் பிரிவின்றி பாதியும் தபசில் சொத்து திருநெல்வேலி மாநகராட்சி 18 வது வார்டு, செயிண்ட் தாமஸ் ரோட்டில் உள்ளதும் தபசில் விபரம் சரி. பழைய கதவு எண். 181 புதிய கதவு எண். 181C ஆகும்.

மேற்படி தபசில் சொத்து அயன் புன்செய் ரீ சர்வே 181/3 ம் நம்பரானது தற்போது திருநெல்வேலி மாநகராட்சி விஜயராகவ முதலியார் சத்திரம் கிராமம் பகுதி –2, டவுண் சர்வே நம்பர் 62/2 டவுண் சர்வே வார்டு BE பிளாக் 0001 சீனிவாசக நகர் என்று உள்ளது.

இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25–ம் நாள் புதன்கிழமை எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

RAJAKUMAR T

uploaded date 11.03.2026
Digitally signed by RAJAKUMAR T
Date: 2026.03.11 13:36:09 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை சார்பு நீதிமன்றம்
திருநெல்வேலி

**அசல் வழக்கு எண். 319/2025**

**தீர்ப்பாணை**
நாள் 25.02.2026